பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2056 ஆவணி 12 வியாழக்கிழமை 28.08.2025 கதிர் 291

### இது ரகசியம் அல்ல!



இது செம்மணிப் புதைகுழி தோண்டப்பட்டுவரும் காலம். செம்மணி முதன் முதலில் 1999ஆம் ஆண்டு தோண்டப்பட்டது. அப்போது கிருஷாந்தி மற்றும் அவரது ☞ 2

சட்டம் அனைவருக்கும் சமம் என்று சொன்னாலும்கூட

## அமைச்சர்கள் மூவருக்கு எதிராக மட்டும் நடவடிக்கைகள் இல்லை

### தயாசிறி எம்.பி. இடித்துரைப்பு

எதிர்க்கட்சிகளுக்கு மாத்திரமின்றி ஆளுந்தரப்பில் குற்றமிழைப்பவர்களுக்கு எதிராகவும் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அமைச்சர்களான குமார ஜயக்கொடி, வசந்த சமரசிங்க, பிமல் ரத்நாயக்க உள்ளிட்டோருக்கு எதிராக முறைப்பாடளிக்கப்பட்டுள்ள போதிலும் சட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர குறிப்பிட்டார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது: ☞ 6

## நேற்றும் 5 எலும்புக்கூடுகள் மொத்தம் 169 இதுவரையில்

செம்மணி மனித புதைகுழியில் இருந்து நேற்று மேலும் 03 எலும்புக்கூடுகள் அடையாளம்காணப்பட்டுள்ளன. அவற்றுடன் இதுவரையில் மொத்தம் 169 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளம்காணப்பட்டுள்ளன. நேற்றைய அகழ்வின்போது ஆண்களின் மேலாடையை ஒத்த ஆடை ஒன்றும் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

செம்மணி மனித புதைகுழியின் இரண்டாம் கட்டத்தின் மூன்றாம் பகுதி அகழ்வு பணிகள் கடந்த திங்கட்கிழமை ஆரம்பிக்கப்பட்ட நிலையில் நேற்று மூன்றாவது நாளாகவும் முன்னெடுக்கப்பட்டது.

நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை அகழ்வாய்வு தளங்களை மேலும் வரிவாக்கும் நடவடிக்கைகளின் போது புதிதாக 16 எலும்புக்கூட்டுத் தொகுதிகள் அடையாளப்படுத்தப்பட்டு இருந்த நிலையில் நேற்று மேலும் 03 ☞ 6

# நீதிக்கான சர்வதேச நீதிமன்றத்தில் இலங்கையை நிறுத்த பரிதுரையுங்கள்

### ஐ.நா. மனித உரிமைகள் பேரவை உறுப்பு நாடுகளிடம் தமிழ் அரசுக் கட்சி வலியுறுத்து




செம்மணி - மனிதப் புதைகுழிகள் இலங்கையில் இனப்படுகொலை நிகழ்ந்திருப்பதை நிரூபிக்கின்றன. அது மட்டுமல்ல, இனப்படுகொலை நோக்கத்திற்கான சான்றுகளையும் அள்ளித்தருகின்றது. இந்தச் சூழலில், மியான்மரைப் போலவே விசாரணைக்காக இலங்கையை நீதிக்கான சர்வதேச நீதிமன்றத்திற்கு (ICJ) பரிந்துரைப்பதை உறுப்பு நாடுகள் தீவிரமாகப் பரிசீலிக்குமாறு நாங்கள் கேட்டுக்கொள்கிறோம் என்று தமிழ் அரசுக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையருக்கும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளுக்கும் எழுதியுள்ள கடிதத்தில் தமிழ் அரசுக் கட்சி இதனை ☞ 2

## இலங்கையின் தரவுக் கட்டமைப்பினை இந்தியாவிற்கு தாரைவார்க்க முடியாது

### சட்ட நடவடிக்கை எடுப்போம் என்கிறார் விமல் வீரவன்ஸ



இலங்கையர்களுக்கு டிஜிட்டல் ஆளடையாள அட்டையை விநியோகிப்பதில் எமக்கு எவ்வித பிரச்சினையும் கிடையாது. இலங்கையர்களுக்கான தேசிய அடையாள அட்டையை ஆட்பதிவுத் திணைக்களமே விநியோகிக்கவேண்டும். இலங்கையின் தரவு கட்டமைப்பை ☞ 2

## ரணில் கைது தொடர்பில் எந்தவித இராஜதந்திர அழுத்தமும் இல்லை

### அயலுறவுத்துறை அமைச்சர் தெரிவிப்பு




பொது சொத்துக்களை முறைகேடாகப் பயன்படுத்தினார் என்று முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டின் அடிப்படையில் முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டமை எவ்வாறு அரசியல் பழிவாங்கலாகும்? இது தொடர்பான சட்ட நடவடிக்கைகள் நீதிமன்றத்தால் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும். எந்தவொரு இராஜதந்திர தரப்புகளும் இந்த விவகாரம் தொடர்பில் எவ்வித நிலைப்பாட்டையும் வெளியிடவில்லை என அயலுறவுத்துறை அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அரச தகவல் திணைக்களத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற அமைச்சரவை ☞ 6

## ரணிலின் உடல்நிலை பற்றி தகவல் தந்த மருத்துவர் மீது ஒழுக்காற்று நடவடிக்கை

### சுகாதாரத்துறை பிரதி அமைச்சர் அறிவிப்பு

முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் உடல்நிலை தொடர்பில் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் ஊடகங்களுக்கு குறிப்பிட்டவற்றில் பல தகவல்கள் போலியானவை. இவரது நடத்தை மருத்துவ கோட்பாட்டுக்கும், நாட்டின் பொதுச்சட்டத்துக்கும் முரணானது. இவருக்கு எதிராக நிச்சயம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதாரத்துறை பிரதி அமைச்சர் ஹங்சக விஜேமுனி தெரிவித்தார்.

சுகாதாரத்துறை அமைச்சின் பணிமனையில் நேற்று ☞ 6

## ஊழல் கட்சிகளின் ஒன்றிணைவு ஆளும்தரப்புக்கு ஒரு சவாலல்ல

### தொழில் பிரதி அமைச்சர் தெரிவிப்பு

தேர்தல் ஒன்றுக்கு அறிவிப்பு விடுத்தால் எதிர்க்கட்சிகளின் ஒன்றிணைவின் உறுதிப்பாட்டை விளங்கிக் கொள்ளலாம். ஊழல்வாதிகளுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதால் ஊழல்வாதிகள் முன்னெச்சரிக்கையாக ஒன்றிணைந்துள்ளார்கள். எதிர்க்கட்சிகளின் ஒன்றிணைவு ஆளும்தரப்புக்கு சவாலல்ல என்று தொழில் பிரதி அமைச்சர் மஹிந்த ஜயசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற நிகழ்வின் பின்னர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் அரசுத்தலைவர் ரணில் விக்கிரமசிங்க அரச நிதியை மோசடி செய்தார், உயிர்த்த ☞ 6

## சட்டவிரோத மீன்பிடியைத் தடைசெய்ய வங்காளவிரிகுடா திட்டம் முன்வைப்பு

சட்ட விரோத, பதிவு செய்யப்படாத மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தப்படாத மீன் பிடியைத் தடுத்தல், ஊக்குவிக்காதிருத்தல் மற்றும் இல்லாதொழிப்பதற்கான வங்காள விரிகுடா பிராந்திய செயற்பாட்டுத் திட்டத்தை முன்னெடுப்பதற்கு ஆளும்தரப்பு தீர்மானித்துள்ளது.

அழிந்துவரும் மீன்வளங்களை மீள்நிலைக்குக் கொண்டுவரல் மற்றும் உணவுப் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கத்துடன் இந்தச் செயற்பாட்டுத்திட்டம் உணவு மற்றும் விவசாய அமைப்பின் உறுப்பு நாடுகளால் 2001ஆம் ஆண்டில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

அதன் பெறுபேறாக, இலங்கையும் அதற்காக தேசிய செயற்பாட்டுத் திட்டத்தைத் தயாரித்துள்ளது.

இத்திட்டத்தின் மூலம் பங்களாதேசம், இந்தியா, மாலைதீவு, மற்றும் இலங்கை போன்ற நாடுகளுக்குரிய தனித்துவமான பொருளாதார வலயங்களைப் போலவே, கடல் மற்றும் சமுத்திரங்களில் தேசிய நீதிமன்ற அதிகாரத்திற்கு அப்பாலுள்ள பிரதேசங்களில் ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

குடும்பத்தினரின் கொலை வழக்குக் குற்றவாளிகளான இராணுவத்தினர் யாழ்ப்பாணம் நீதிமன்றத்திற்கு அழைத்து வரப்பட்டிருந்தனர். யாழ். நகரத்தில் 4ஆம் குறுக்குத் தெருவில் இருந்த ஒரு வீட்டில்தான் நீதிமன்றம் இயங்கிக் கொண்டிருந்தது. செம்மணி வழக்குக்காக பன்னாட்டுப் பத்திரிகையாளர்கள், உள்ளூர் பத்திரிகையாளர்கள் என்று பெரும் எண்ணிக்கையானவர்கள் நீதிமன்றத்தில் குவிந்திருந்தனர். அவர்களைக் கட்டுப்படுத்தக்கூடிய ஆளணியோ வசதியே அப்போது அங்கிருக்கவில்லை. போர்ச் சூழலுக்கு மத்தியில் யாழ்ப்பாணம் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டில் ஒரு திறந்தவெளிச் சிறைச்சாலையாக இருந்த சமயத்தில் நீதிமன்றமும் அப்போதைக்கு தனது விதிமுறைகளை இறுக்கமாகக் கடைப்பிடிக்க முடியவில்லை.

அதனால், செய்தி நிறுவனங்களின் ஒளிப்படக் கலைஞர்கள் அன்று மன்றுக்குள் நுழைந்து குற்றவாளி சோமரத்ன ராஜபக்ச வாக்குமூலம் வழங்குவதையும் நீதிமன்றச் செயற்பாடுகளையும் தாராளமாக ஒளிப்படம் எடுத்தார்கள். அன்றும் அதையடுத்து வந்த நாட்களிலும் இது பெரும் ஆச்சரியத்துக்குரியதாகவும், இலங்கையின் மற்றையபகுதிகளிலிருந்துயாழ்ப்பாணம்வேறு விதமாக இருப்பதைப் புரியவைப்பதாகவும் இந்த விடயம் பரபரப்பாகப் பேசப்பட்டது. ஏனெனில் நீதிமன்றத்திற்குள்ளே ஒளிப்படம் எடுப்பது தடைசெய்யப்பட்டிருக்கின்றது. நீதிமன்ற அனுமதியின்றி எவரும் நீதிமன்ற நடவடிக்கைகளைப் பதிவு செய்யவும் முடியாது. இது ஒரு இறுக்கமான கட்டுப்பாடு. இப்படியிருக்கையில் யாழ்ப்பாண நீதிமன்றத்திற்குள் பெரிய கமெராக்களுடன் செய்தியாளர்கள் படங்களை எடுத்துத் தள்ளியதுதான் அதற்குக் காரணம்.

அதன் பின்னர் ரணில் விக்கிரமசிங்க கடந்த வெள்ளிக்கிழமை நீதிமன்றத்தில் அமர்ந்திருந்த காட்சி ஊடகங்களில் ஒளிப்படமாக வெளிவந்திருந்தது. அதைப் பார்த்ததும் எனக்கு ஆச்சரியமாக இருந்தது. ஆனால், யாரோ ஒருவர் நீதிமன்ற அனுமதியின்றி திருட்டுத் தனமாக அந்தப் படத்தை எடுத்து வெளியிட்டிருக்கிறார் என்பதைப் பார்த்துப் புரிந்துகொள்வது சிரமமாக இருக்கவில்லை. இப்போது அப்படிப் படம் எடுத்து வெளியிட்டவருக்கு வில்லங்கம் வந்திருக்கின்றது. நீதிமன்ற அனுமதியின்றி அந்தப் படத்தை எடுத்தவர் யார் என்பதை உடனடியாக விசாரித்துக் கண்டறியும்படி நீதிவான் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தினருக்கு உத்தரவிட்டிருக்கின்றார். ரணிலோடு சேர்ந்தவர்களுக்கு மட்டுமில்லை ரணிலைப் பார்த்தவர்கள், படமெடுத்தவர்கள் என்று எல்லோருக்குமே பிரச்சினைதான் போலும்.

நல்லவேளையாழ்ப்பாணம்நீதிமன்றமும் அப்படியொரு உத்தரவை 1999இல் பிறப்பித்திருந்தால் ஒரே நாளில் யாழ்ப்பாணம் சிறைச்சாலை நிரம்பி வழிந்திருக்கும்.

ரணில் விக்கிரமசிங்கவின் கைது மற்றும் விளக்கமறியலுடன் லண்டனின் வேல்வர்ஹம்டன் பல்கலைக்கழகத்தின் வேந்தரான பிரபு போல் இன் இறப்பு தொடர்புபடுத்தப்படுகின்றது. இந்திய வம்சாவழியைச் சேர்ந்தவரான இந்தப் பிரபுதான் ரணிலின் மனைவி மைத்திரியின் பட்டமளிப்பு விழாவிற்காக ரணிலை பல்கலைக்கழகத்திற்கு அழைத்தவர். அவரது அழைப்பின் பேரில் லண்டனிற்கு தனது தனிப்பட்ட குடும்பத் தேவைக்காகச் சென்ற ரணில் அதற்காக அரசுப் பணத்தில் ஒரு கோடி 66லட்சம்ரூபாவைச்செலவிட்டார்என்பதுதான் தற்போதுள்ள வழக்கு. இப்படியொரு வழக்கில் ரணிலைச் சிக்கவைப்பதற்கு தான் காரணமாகிவிட்டாரோ என்கிற கவலையில் போல் பிரபு மாரடைப்பு ஏற்பட்டு இறந்து போனார் என்ற வகையில் இப்போது சர்ச்சைகள் கிளம்பியுள்ளன.

இது உண்மையா பொய்யா என்பது ஒருபுறமிருக்க, இந்தப் போல் பிரபு போரின் போது பிரிட்டன் உள்ளிட்ட மேற்கு நாடுகள் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு எதிரானநிலைப்பாட்டைஎடுப்பதற்குஇலங்கை அரசுக்கு பெரும் உதவிகளைச் செய்தவர் என்பதும்எவ்வளவுபெரியமனிதஉரிமைகள் மீறல்களுக்கு இடையிலும் இலங்கைக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் போன்ற வர்த்தகச் சலுகைகளைஐரோப்பியஒன்றியத்திடமிருந்து பெறுவதற்கும் பெரும் துணை நின்றவர் என்பதும்குறிப்பிடத்தக்கது. ஆக, ரணிலுக்கும் போல் பிரபுவுக்கும் இடையிலான உறவு என்பது பல்கலைக்கழகத்தால் ஏற்பட்டதொன்றல்ல என்பதும், அது அதையும் தாண்டிப் புனிதமானது, நீண்ட ஆயுள் கொண்டது என்பதும் தெரிகிறது. அத்தகைய நெருக்கத்தின் காரணமாக ரணிலின் கைது அவருக்கு அதிர்ச்சியைக் கொடுத்து அவரது இறப்பை ஊக்குவித்திருக்கலாம் என்பதும் மறுக்கப்படக்கூடியதல்ல.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## நீதிக்கான....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலியுறுத்தியுள்ளது. அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

2025 செப்டம்பரில் நடந்த 57ஆவது அமர்வில்ஏற்றுக்கொள்ளப்பட்டஇலங்கையில் பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்தை ஊக்குவித்தல் கூழியூளீ 57/1, தீர்மானத்தின் காலம், 2025 செப்டம்பரில் நடைபெறும் 60ஆவது அமர்வோடு முடிவடையும்.

நாங்கள் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குதமிழ்மக்களைபிரதிநிதித்துவப்படுத்தும் முதன்மை அரசியல் கட்சி (1949 இல் தொடங்கப்பட்டதிலிருந்து கூட்டாட்சி கட்சி என்று அழைக்கப்படுகிறது), இரண்டு மாகாணங்களிலும்உள்ளஒவ்வொருதேர்தல் மாவட்டத்திலிருந்தும் எமது கட்சி சார்பில் பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, எங்கள் மக்களின் சில தீவிரமான கவலைகளை உங்கள் முன் வைப்பது எங்கள் கடமை என்று கருதுகிறோம்.

தமிழ் மக்கள் தொன்றுதொட்டே இலங்கையில் வாழ்ந்து வருகின்றனர், வரலாற்று ரீதியாக நாட்டின் வடக்கு கிழக்கை வாழிடமாகக் கொண்டுள்ளனர். நாங்கள் சொந்த மொழி மற்றும் பண்பாட்டைக் கொண்ட தனித்துவமான மற்றும் வேறுபட்ட மக்கள். தமிழ் மக்களில் பெரும்பாலோர் இந்துக்கள், தமிழ் பேசும் முஸ்லிம்கள் மற்றும் கிறிஸ்தவர்கள், சிங்களவர்களில் பெரும்பாலானோர் பௌத்தர்கள்.

ஐரோப்பியர்கள் வெற்றிகொள்வதற்கு முன்பு இந்தத் தீவில் மூன்று அரசாட்சிகள் இருந்தன, அவற்றில் ஒன்று வடக்கு கிழக்கில் இருந்த தமிழ் அரசாட்சி. பிரிட்டனிடமிருந்து சுதந்திரம் பெற்ற நேரத்தில் (1833 இல் நிர்வாக வசதிக்காக பிரிட்டன் மூன்று பிரிவுகளையும் இணைத்தது), ஒரு எளிய பெரும்பான்மை வகை அரசமைப்பு இயற்றப்பட்டது, அது பின்னர் மற்றொரு அரசமைப்பால் மாற்றப்பட்டது, இது இலங்கையை ஒரு 'ஒற்றையாட்சி அரசு' என்று அங்கீகரித்து பௌத்தத்திற்கு 'முக்கிய இடம்' வழங்கியது. இந்த அரசமைப்பு சிங்களத்தை மட்டுமே அதிகாரப்பூர்வ மொழியாக அங்கீகரித்தது.

தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட இந்த வேறுபாடுகளும் பிற பாகுபாடுகள் மற்றும் அவ்வப்போது நிகழ்த்தப்பட்ட வன்முறைகளும், காலனித்துவ சக்திகளிடம் இழந்த எமது இறையாண்மையை மீட்டெடுக்கக் கோருவதற்கு 1976 இல் எங்களைத் தூண்டின. இந்தக் கோரிக்கை பின்னர் இதே நோக்கத்தை அடைவதற்கான ஆயுதப் போராட்டத்திற்கு வழிவகுத்தது.

இருப்பினும், அந்த ஆயுதப் போராட்டம் 2009 இல் இராணுவ வழிமுறைகளால் அடக்கப்பட்டது, இலங்கைப் பாதுகாப்புப் படைகளின் கடுமையான போர்க்குற்றங்கள், மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் பிற சர்வதேச குற்றங்களோடு போர் முடிவுக்கு வந்தது. இந்த சர்வதேச குற்றங்களில் தமிழ் மக்களுக்கு எதிராக, மிகத் தீர்க்கமாக உள்நோக்கத்துடன் பல தசாப்தங்களாக மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலையும் அடங்கும், போரின் கடைசி கட்டத்தில் இடம்பெற்ற தொடர்ச்சியான நிகழ்வுகளால் இது உச்சக்கட்டத்தை அடைந்தது.

மிகச்சமீபத்தில்வடக்கில்யாழ்ப்பாணத்தில் உள்ள செம்மணியில் ஒரு பெரிய மனிதப் புதைகுழிகண்டுபிடிக்கப்பட்டது.அதிலிருந்து150 எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டுள்ளன. அவற்றில் 96% துணிகள் இல்லாமல் ஏற்கனவே ஒரு சிறிய சதுக்கத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்தப்பகுதியை 'ஸ்கேன்' செய்ததில் இன்னும் பல உடல்கள் இருப்பதற்கான வாய்ப்புகளை அது காட்டியுள்ளது. 1999 ஆம் ஆண்டு நீதிமன்றத்தில் தண்டனை பெற்ற ஒரு சிப்பாய், இந்தப் பகுதியில் நூற்றுக்கணக்கான உடல்கள்இராணுவத்தால்புதைக்கப்பட்டதாகத் தெரிவித்தார். 1990களின்நடுப்பகுதியில்இந்தப் பகுதியில் காணாமல் போனவர்கள் குறித்து விசாரித்த மனித உரிமைகள் ஆணையத்தின் அறிக்கைகளும்உள்ளன. இவைஅனைத்தும் தமிழர்களை இனப்படுகொலை செய்யும் நோக்கம் உண்மையில் இருந்தது என்பதைத் தெளிவாகச் சுட்டிக்காட்டுகின்றன.

இலங்கை அரசு தமிழ் மக்களுக்கு எதிராகச் செய்த குற்றங்களின் அளவையும் கொடூரத்தையும் நீங்கள் தெளிவாக அறிந்துகொள்வதற்காகவேஇவற்றையெல்லாம் உங்கள்கவனத்திற்குக்கொண்டுவருகிறோம். இலங்கைவிவகாரத்தைச்சர்வதேசகவனத்தின் கீழ் வைத்திருப்பதில் மனித உரிமைகள் பேரவையும் நீங்களும் ஒரு தசாப்தத்திற்கும் மேலாக எடுத்துவரும் நடவடிக்கைகளை நாங்கள் மிகவும் பாராட்டுகிறோம்.

ஒக்டோபர் 2015 இல், பேரவையில் 30/1 (கூழியூளீ/30/1) தீர்மானம் நிறைவேற்றியது, இதற்கு இலங்கையால் இணைஅனுசரணை வழங்கப்பட்டது,பின்னர்கொழும்புஅரசுஅந்தத் தீர்மானத்திலிருந்து வெளியேறியது. அந்தத் தீர்மானம்சர்வதேசநீதிபதிகளின்பங்கேற்புடன் ஒரு கலப்பு நீதிமன்றத்தையும், மீண்டும் நிகழாததற்கான உத்தரவாதமாக செயல்படும் ஒரு புதிய அரசமைப்பையும் வழங்கியது. தற்போது இலங்கை பொறுப்புக்கூறல் திட்டத்தினு–டாகதகவல்களை உள்வாங்குதல் மற்றும் செயலாக்குவதற்கான செயல்முறை (நுறீஸிபுஊண) ஊடாகஐ.நா. மனிதஉரிமைகள் ஆணையாளர் அலுவலகம் ஆதாரங்களைச் சேகரித்து அவற்றைப் பாதுகாத்து வருகிறது, இந்தச் செயற்பாடு தொடரப்பட்டு மேலும் விரிவாக்கப்படவேண்டும், மேலும் திட்டம் முன்கூட்டியே முடிக்கப்படவேண்டும். அதன் பிறகு இது தீர்க்கமான நடவடிக்கைகளுக்காக பிற பொருத்தமான ஐ.நா அமைப்புகளுக்கு அனுப்பப்படவேண்டும்.

இலங்கைரோம்சட்டத்தில்கையெழுத்திட்ட நாடு அல்ல, எனவே விரைவில் அதை ஏற்றுக்கொள்ள வலியுறுத்தப்படவேண்டும். இலங்கைமனிதஉரிமைகள்ஆணையத்தின் அறிக்கை ஒன்று இதைச் செய்ய பரிந்துரைத்திருக்கிறது. இதேபோல், உயர் ஆணையர் சபைக்கு அளித்த அறிக்கையின் முன்கூட்டிய நகலிலிருந்து அதே பரிந்துரை செய்யப்படுவதை நாங்கள் கவனிக்கிறோம். அந்த வகையில், பொறுப்புக்கூறல் பிரச்சினைகள் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்குபரிந்துரைக்கப்படலாம்,மேலும் இனப்படுகொலை பிரச்சினையை நீதிக்கான சர்வதேச நீதிமன்றத்திலும் பொருத்தமான வழிகளில் எடுத்துக்கொள்ளலாம். இந்த அறிக்கையில் உள்ளூர் வழிமுறைகள் மூலம் முன்னேற்றம் இல்லாதது குறித்து உயர் ஆணையர் விமர்சன ரீதியாகக் கருத்து தெரிவித்திருந்தாலும், இலங்கையில் பொறுப்புக்கூறலுக்கான உள்ளூர் வழிமுறைகளை அவர் நம்பியிருப்பதாகத் தோன்றுவது குறித்து பாதிக்கப்பட்ட சமூகம் ஏமாற்றமடைந்துள்ளது, அந்த வழிமுறைகள் கடந்த ஒன்றரை தசாப்தங்களுக்கும் மேலாக பயனற்றவை என்று நிரூபிக்கப்பட்டுள்ளன.

காணாமலாக்கப்பட்டவர்களுக்கான அலுவலகம்(நுனிஊண)போன்றஅமைப்புகளில் சர்வதேச பங்கேற்புக்கான ஏற்பாடுகள் உள்ளன, எனவே அத்தகைய ஈடுபாட்டை பரிந்துரைப்பது பயனுள்ளதாக இருக்கும், இது எங்களுக்கு ஓரளவு நம்பிக்கையைத் தரும்.

வரவிருக்கும் 60ஆவது அமர்வில் நிறைவேற்றப்பட வேண்டிய தீர்மானம், 'தமிழ் தேசியப் பிரச்சினையை' முறையாகக் கையாளும் அளவுக்கு ஒருதிருப்புமுனையாக இருக்கவேண்டும்.

எனவே, இலங்கைத் தமிழ் மக்களின் அரசியல்பிரதிநிதிகளாக,நிறைவேற்றப்படவுள்ள தீர்மானத்தில்பின்வருவனவற்றைசாதகமாகக் கருத்தில் கொள்ளுமாறு நாங்கள் உங்களை கேட்டுக்கொள்கிறோம்:

1. செம்மணி – சிந்துப்பாத்தி இந்து மாயனத்தின் ஒரு சிறிய பகுதியில் சமீபத்தில் 150 எலும்புக்கூட்டு எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதும், இன்னும்பெரிய பகுதிகள் தோண்டப்பட வேண்டியிருப்பதும் இங்கு இனப்படுகொலை நிகழ்ந்திருப்பதை மட்டுமல்ல,இனப்படுகொலைநோக்கத்திற்கான சான்றுகளையும் அள்ளித் தருகின்றன. இந்தச் சூழலில், மியான்மரைப் போலவே விசாரணைக்காக இலங்கையை நீதிக்கான சர்வதேச நீதிமன்றத்திற்கு (ஞூளீமூ) பரிந்துரைப்பதை உறுப்புநாடுகள் தீவிரமாகப் பரிசீலிக்குமாறுநாங்கள்கேட்டுக்கொள்கிறோம்.

2. போர்க்குற்றங்கள், மனிதகுலத்திற்கு எதிரானகுற்றங்கள்,சர்வதேசமனிதஉரிமைகள் சட்ட மீறல்கள் போன்றவற்றைத் தவிர, இனப்படுகொலை மற்றும் இனப்படுகொலை நோக்கத்தை சுட்டிக்காட்டும் ஆதாரங்களை சேகரிக்கும் வகையில் நுறீஸிபுஊண இன் நோக்கத்தை விரிவுபடுத்துதல். நுறீஸிபுஊண இன் இந்த ஆதாரங்களைச் சேகரித்தல் மற்றும் பாதுகாத்தல் ஆகியவை விரிவான நோக்கத்துடன் தொடரப்படவேண்டிய அதேநேரம் விரைவாகவும் முடிக்கப்படவேண்டும்.

3. ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபை தீர்மானத்தின் மூலம் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு (ஞூளீளீ) இலங்கையைப் பரிந்துரைப்பது கிட்டத்தட்ட சாத்தியமற்றது என்றாலும், தேசிய மனித உரிமைகள் ஆணையம்மற்றும்ஐ.நா. மனிதஉரிமைகள் உயர் ஆணையர் பரிந்துரைத்த ரோம் சட்டத்தில் கையெழுத்திட்டு ஒப்புதல் அளிக்க இலங்கை அரசை வற்புறுத்தவேண்டும்.

4. குற்றங்கள் மீண்டும் நிகழாமையை உறுதிப்படுத்தும் வகையில், தமிழ் மக்களுடன் புதிதாக பேச்சு நடத்தி எட்டப்படும் இணக்கத்துடன் வடக்கு கிழக்கில் விரிவான அதிகாரப் பகிர்வுடன் கூடிய புOதிய கூட்டாட்சி அரசமைப்பை இயற்ற இலங்கையை தொடர்ந்து வற்புறுத்த வேண்டும். உடனடி நடவடிக்கையாக, மாகாண சபைத் தேர்தலை மேலும்தாமதமின்றிநடத்த இலங்கைஅரசை வலியுறுத்த வேண்டும் – என்றுள்ளது.

## சட்டவிரோத....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்ட விரோத, பதிவு செய்யப்படாத மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தப்படாத மீன் பிடியைத் தடுத்தல், ஊக்குவிக்காதிருத்தல் மற்றும் இல்லாதொழிப்பதைப் பலப்படுத்துவதே நோக்கம்.

அதற்கமைய, குறித்த பிராந்திய செயற்பாட்டுத் திட்டத்தில் கையொப்பமிடுவதற்காக கடற்றொழில், நீரியல் மற்றும் சமுத்திர வளங்கள் அமைச்சர் சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## இலங்கையின்....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தியாவுக்குத் தாரைவார்க்கமுடியாது. நாங்கள் அதற்கு இடமளிக்கப் போவதில்லை. சட்டத்தின் ஊடாக உரிய நடவடிக்கை எடுப்போம்எனதேசியசுதந்திரமுன்னணியின் தலைவரும்,முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமானவிமல்வீரவன்சதெரிவித்தார்.

டிஜிட்டல் அடையாள அட்டை திட்டத்தை இந்தியாவுக்கு வழங்கியுள்ளதை சவாலுக்குட்படுத்தி தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச 2025 ஜூலை 22 உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் வழக்கு தாக்கல் செய்திருந்தார்.

இந்தஅடிப்படைஉரிமைமீறல்வழக்கினை விசாரணைக்கு எடுத்துக்கொள்வது நேற்று உயர்நீதிமன்றத்தால் பரிசீலிக்கப்பட்டது. இந்த மனு தொடர்பில் நேற்று புதன்கிழமை உயர்நீதிமன்றத்தில் முன்னிலையானதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச மேலும் தெரிவித்ததாவது:

தேசிய அடையாள அட்டை கட்டமைப்பை நவீனமயப்படுத்துவதற்காகவும், டிஜிட்டல் அடையாளஅட்டைவிநியோகதிட்டத்துக்காகவும் ஆட்பதிவுத் திணைக்களத்தால் 5.5 பில்லியல் ரூபா செலவழிக்கப்பட்டு, திட்டம் 99 சதவீதம் நிறைவுறும் தருவாயில் இருந்தது.

இவ்வாறான நிலையில்தான் இலங்கையர்களுக்கு டிஜிட்டல் அடையாள அட்டையை விநியோகிக்கும் திட்டத்தை இந்த ஆளும்தரப்பு இந்தியாவுக்கு வழங்கியது. இலங்கை மக்களின் தனிப்பட்ட தரவுகளை இந்தியாவுக்கு வழங்குவதால் இலங்கையின் தேசியபாதுகாப்புக்கும், இறையாண்மைக்கும் பாதிப்பு ஏற்படும் என்பதை சுட்டிக்காட்டி இந்த திட்டத்தை உயர்நீதிமன்றத்தில் சவாலுக்குட்படுத்தினோம்.

இலங்கையர்களுக்கு டிஜிட்டல் ஆளடையாள அட்டையை விநியோகிப்பதில் எமக்கு எவ்வித பிரச்சினையும் கிடையாது. இலங்கையர்களுக்கான தேசிய அடையாள அட்டையை ஆட்பதிவுத் திணைக்களமே விநியோகிக்கவேண்டும். இலங்கையின்தரவு கட்டமைப்பை இந்தியாவுக்கு தாரைவார்க்க முடியாது.நாங்கள் அதற்கு இடமளிக்க போவதில்லை. சட்டத்தின் ஊடாக உரிய நடவடிக்கை எடுப்போம்.

இந்தியாவுக்கு எதிரான கொள்கையை கொண்டிருந்த ஜேவிபி முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை காட்டிலும் இந்தியாவுக்கு அடிபணிந்துள்ளது என்பதை மாத்திரம் குறிப்பிட வேண்டும்.

தொடர்ச்சி 6ம் பக்கம்....


புதிய கல்வியாண்டு
2025
zoom
76667-4945
LEARN EASY
E
KNOWLEDGE IS POWER
தமிழ் English
கணிதம் விஞ்ஞானம்
வரலாறு சிங்களம்
கணக்கீடு
English Literature
ICT
January 25 FREE
February 5
தரம் 6
தொடக்கம்
தரம் 11
வரை


உங்கள் கனவை நனவாக்க ...!
NVQ Level 3 & 4 Courses
புதிய பிரிவுகள்
ஆரம்பம்
20.04.2025
கற்கும் போதே
தொழில் ஆற்றக்
கூடிய வாய்ப்பு
●CARE GIVER COURSE
(பராமரிப்பாளர் பயிற்சி)
●NURSE ASSISTANT COURSE
(தாதிய உதவியாளர் பயிற்சி)
கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன்
3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்
தகுதி:
●வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
●ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
●GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி
JDr
JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY
46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## கல்வியைக் காப்போம்

இலங்கையின் கல்வி அமைப்பைச் சுற்றிய மிகக் கடினமான விவாதங்களில் ஒன்று தற்போது உருவாகியுள்ளது. நாட்டின் பல்வேறு மாகாணங்களில் 50 மாணவர்களுக்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட சுமார் 1,400 தொடக்கப் பாடசாலைகள் இயங்குகின்றன என்பதே அந்த விவாதத்தின் மையமாகும். இவற்றில் பலவும் கிராமப்புறங்களிலும் தொலைதூரப் பகுதிகளிலும் அமைந்துள்ளன. இப்போது இப்பாடசாலைகளில் சிலநூற்றுக்கணக்கானவை நிரந்தரமாக மூடப்படும் அபாயத்தில் உள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

மாணவர் சேர்க்கை குறைவான பாடசாலைகளில் வட மாகாணம் 275 என்ற அதிக எண்ணிக்கையுடன் முதலிடம் வகிக்கிறது. அதன்பின் மத்திய மாகாணம் (240), சபரகமுவ (230), ஊவா (158), கிழக்கு (141), வடமேல் (133), தெற்கு (125), வடமத்திய (111), மற்றும் மேற்கு (73) என பட்டியல் நீள்கிறது. இந்த எண்ணிக்கைகள் வெறும் புள்ளிவிவரங்கள் அல்ல, இவை கிராமப்புறக் கல்வியின் நிதர்சன நிலையை வெளிப்படுத்தும் எச்சரிக்கைச் சத்தங்களாகும்.

இதேவேளை, 60 மாணவர்களுக்கும் குறைவான மாணவர்களைக் கொண்ட மேலும் 1,506 பாடசாலைகள் இருப்பதாகவும் கல்வி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இவற்றின் அடிப்படையில், மொத்தம் சுமார் 90,000 மாணவர்கள் இவ்வாறு குறைந்த சேர்க்கை கொண்ட பாடசாலைகள் மீது தங்களது அடிப்படை கல்விக்காக சார்ந்துள்ளனர் என்பது புலப்படுகிறது.

இந்த பாடசாலைகளை மூடி மாணவர்களை அருகிலுள்ள பெரிய பாடசாலைகளுக்கு மாற்றுவது நல்லதா என்பதே இப்போது விவாதமாகியுள்ளது. கல்வி அமைச்சு நேற்று தெளிவுபடுத்தியிருப்பதன்படி—அனைத்து சிறிய பாடசாலைகளையும் மூடும் ஒரே மாதிரியான தீர்மானம் எதுவும் இல்லை, ஒவ்வொரு பாடசாலையின் சூழ்நிலைகளையும் பொருத்து முடிவெடுக்கப்படும்.

ஆனால், பெற்றோர்கள், உள்ளூர் மக்கள், மற்றும் கல்வி தொழில்முறை அமைப்புகள் கூறுவது வேறுவிதம். "பாடசாலைகளை மூடுவது ஒருதீர்வு அல்ல; சிறிய பாடசாலைகளை மேம்படுத்தினால்தான் மாணவர்கள் தங்கள் சொந்தக் கிராமங்களில் கல்வி பெறுவார்கள்" என சிங்களப் அதிபர்கள் சங்க (CPU) தலைவர் பியாசிறி பெர்னாண்டோ எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இப்பாடசாலைகள் ஏன் மாணவர்களை ஈர்க்க முடியாமல் போகின்றன? காரணங்கள் பல உள்ளன:

கடந்த இரு தசாப்தங்களாக கல்விக்கு போதுமான நிதி ஒதுக்கப்படாமை.

ஆசிரியர் தட்டுப்பாடு மற்றும் அடிப்படை வசதிகளின் பற்றாக்குறை.

நகர மயமாக்கலால் கிராமங்களில் மக்கள் தொகை குறைந்து வருவது.

கொவிட்—19 தொற்றுநோயின் பிந்தைய விளைவுகள்.

நீண்டகால பொருளாதார நெருக்கடி காரணமாக பாடசாலை விலகல்கள் அதிகரித்தல்.

இவை அனைத்தும் மாணவர்களின் முறையான வருகையையும், படிப்பில் கவனத்தையும் பாதித்துள்ளன. இதனால் ஆசிரியர்கள், முதல்வர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் பலமடங்கு அதிகரித்துள்ளன.

இவ்வாறு சிறிய பாடசாலைகள் சவால்களை எதிர்கொள்வதற்கான தீர்வு வெறும் அரசின் நிதி ஒதுக்கீடோ, கட்டட வசதிகள் சேர்ப்பதோ மட்டுமல்ல. முழுமையான அரச அணுகுமுறை (Whole-of-Government Approach) அவசியமாகிறது. கல்வி அமைச்சு, பாதுகாப்பு அமைச்சு, பிரதேச சபைகள், சமூக அமைப்புகள், பெற்றோர் – அனைவரும் ஒன்றிணைந்து மாணவர்களுக்கு கல்வியைத் தொடரும் சூழலை உறுதி செய்ய வேண்டும்.

மாணவர்கள் அருகிலுள்ள பாடசாலைகளில் கல்வி பெறுவது போக்குவரத்து சிரமங்களையும் பாதுகாப்பு பிரச்சினைகளையும் உருவாக்கும். குறிப்பாக, தொலைதூர கிராமங்களில் இருந்து குழந்தைகள் தினமும் நீண்ட தூரம் பயணிக்க வேண்டியிருக்கும். இதனால் கல்வி விலகல்கள் மேலும் அதிகரிக்கும் அபாயம் உள்ளது.

இலங்கையின் மிகப் பெரிய சொத்து இயற்கை வளமல்ல, மனித வளமே. மக்கள் தொகை விகிதம் படிப்படியாகக் குறைந்து வரும் நிலையில், நாட்டின் எதிர்கால தலைமுறையை கல்வியறிவு இல்லாமல் விடுவது தேசிய தற்கொலைக்கு ஒப்பானது.

சிறிய பாடசாலைகளை மூடுவதற்குப் பதிலாக, அவற்றை சிறப்புப் பள்ளிகளாக மாற்றுவது, டிஜிட்டல் கல்வியை ஊக்குவிப்பது, மற்றும் ஆசிரியர் வளத்தை நியாயமான முறையில் பகிர்வது போன்ற மாற்று வழிகள் ஆராயப்படவேண்டும்.

சிறிய பாடசாலைகளை மூடுவதா அல்லது மேம்படுத்துவதா என்பது வெறும் நிர்வாகத் தீர்மானமல்ல. இது ஒரு சமூகத் தீர்மானமும், ஒரு தேசியப் பொறுப்பும் ஆகும். மாணவர்கள் தங்கள் சொந்த ஊரில் கல்வி பெறும் உரிமையைப் பாதுகாக்க வேண்டியது அரசின் கடமை. எனவே, கல்வி அமைச்சு கூறும் போன்று ஒவ்வொரு பள்ளியின் சூழ்நிலையையும் கவனத்தில் கொண்டு, மாணவர்களின் நலன் முதன்மை என்ற அடிப்படையில் முடிவெடுக்கவேண்டும். கல்வியைப் பாதுகாப்பதே நாட்டைப் பாதுகாப்பு என்பதே இச்சூழ்நிலையில் அனைவரும் மறக்கக் கூடாத உண்மை.

# சமுர்த்தி மற்றும் இறப்பர் கட்டுப்பாடு சட்டங்களில் சபாநாயகர் கையொப்பம்

சமுர்த்தி (திருத்தச்) சட்டமூலம் மற்றும் இறப்பர் கட்டுப்பாட்டு (திருத்தச்) சட்டமூலம் என்பவற்றில் சபாநாயகர் (வைத்தியர்) ஜகத் விக்கிரமரத்ன அண்மையில் தனது கையொப்பத்தையிட்டு சான்றுரைப்படுத்தினார்.

2013 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க சமுர்த்தி சட்டத்தைத் திருத்துவதற்காக, 2025 ஜூன் 17 ஆம் திகதி கிராம அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சரினால் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட இந்தச் சட்டமூலம், நிதிநிறுவனங்களின்நிதிமேற்பார்வையை மேம்படுத்துவதற்கும், நிதி நிறுவனங்களுக்குள் பொறுப்புக்கூறலை வலுப்படுத்துவதற்குமான ஏற்பாடுகளை வழங்குகின்றது.

அத்துடன், இந்தத் திருத்தத்தின் ஊடாக சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான வங்கிகள் மற்றும் சமுர்த்தி சமுதாய அடிப்படையிலான சங்கங்களின்கணக்குகளைநிதிநிறுவனங்களுக்குள் பொறுப்புக்கூறலைவலுப்படுத்துவதற்காககணக்காய்வு செய்வதற்குத் தேசிய கணக்காய்வு அலுவலகத்திற்கு வழங்குவதன் மூலம், தற்போதுள்ள சட்டரீதியான மற்றும் தேசிய கணக்காய்வு ஏற்பாடுகளுக்கு இணங்குவதை உறுதி செய்கின்றது.

1956 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க இறப்பர் கட்டுப்பாட்டுச் சட்டத்தைத் திருத்துவதற்கான இறப்பர் கட்டுப்பாட்டு (திருத்தச்) சட்டமூலம், தற்போதுள்ள , கட்டுப்பாட்டாளர், மற்றும் இறப்பர் கட்டுப்பாட்டாளர் ஆகிய பதவிகளுக்குப் பதிலாக பணிப்பாளர் தலைமையதிபதி என்ற பதவியை மாற்றீடு செய்வதற்கும்இ அதற்கமைய இறப்பர் அபிவிருத்தித் துறையின் கட்டுப்பாட்டை பணிப்பாளர் தலைமையதிபதிபதவியின்கீழ்கொண்டுவருவதற்கும் ஏற்பாடுகளை செய்கின்றது.

அதற்கமைய இந்த இரண்டு சட்டமூலங்களும் 2025 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சமுர்த்தி (திருத்தச்) சட்டம் மற்றும் 2025 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க இறப்பர் கட்டுப்பாட்டு (திருத்தச்) சட்டமாக நடைமுறைக்கு வருகின்றன.

# நடுவுநிலை சட்டமூலத்திற்கு அனுமதி

ஆளுகை, நீதி மற்றும் சிவில் பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவில் கருத்திற்கொள்ளப்பட்ட நடுவுநிலை (குடியியல் மற்றும் வர்த்தகப் பிணக்குகள்) சட்டமூலத்திற்கு அக்குழுவின் அனுமதி வழங்கப்பட்டது.

இக்குழு அதன் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் (வைத்தியர்) நஜித் இந்திக்க தலைமையில் அண்மையில் நாடாளுமன்றத்தில் கூடியபோதே இந்த அனுமதி வழங்கப்பட்டது.

இந்தச் சட்டமூலத்தை முன்வைப்பது குறித்து கருத்துத்தெரிவித்தநீதிமற்றும்தேசியஒருமைப்பாட்டு அமைச்சின் அதிகாரிகள், வர்த்தக நடுவுநிலை சம்பந்தமான ஒரு நிலையத்தை நிறுவும் நோக்குடன் விசேடமாக உருவாக்கப்பட்ட 2000 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க இலங்கை வர்த்தக நடுவுநிலைச் சட்டத்தை, சில தொழில்நுட்பக் காரணங்கள் மற்றும் கட்டுப்பாடுகள் காரணமாக நடைமுறைப்படுத்த முடியாமல் போயுள்ளதாகச் சுட்டிக்காட்டினர்.

அதற்கமைய, அந்தச் சட்டத்தை நீக்குதல், வர்த்தக நடுவுநிலையை எட்டுவதற்கான குறைந்தபட்ச தரநிலைகளை உள்வாங்குதல் மற்றும் அத்தகைய ஒழுங்குவிதிகளுக்கு உட்பட்டு நீதிமன்றக் கட்டமைப்பு மூலம் நடுவுநிலைத் தீர்ப்புக்களை அமுல்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்தல் உள்ளிட்ட நோக்கங்களுடன் ஒரு புதிய சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

தற்போதுள்ள சட்டக் கட்டமைப்பிற்குள் பிணக்குகள் தீர்வுக்கான மாற்றுப் பொறிமுறையாக கட்டாய நடுவுநிலை ஏற்றுக்கொள்ளப்பட்டாலும், தன்னார்வ நடுவுநிலையைப் பொறுத்தவரையில் அதன் பயன்பாடு குறைவாகவே உள்ளது என்று அமைச்சின் அதிகாரிகள் குழுவிடம் தெரிவித்தனர்.

நடுவுநிலை உடன்படிக்கை ஒன்றுக்கு வருதல் அல்லது அத்தகைய உடன்படிக்கை இல்லாத நிலையில் பிணக்கு சம்பந்தப்பட்ட ஒரு தரப்பினர் தன்னார்வமாக முன்வந்து நடுவுநிலையை நாடும்போது அல்லது நீதிமன்றத்தால் பரிந்துரைக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் குடியியல் மற்றும் வர்த்தகப் பிணக்குகள் தொடர்பான தன்னார்வ நடுவுநிலையத்துக்கான ஒரு சட்டரீதியான கட்டமைப்பை அறிமுகப்படுத்துவது முக்கியம் என்றும்,

இதன் மூலம் சிறந்த பாதுகாப்பு வழங்கப்படும் என்றும், நாட்டின் குடியியல் மற்றும் வர்த்தகத் துறைகளில் அர்த்தமுள்ள வளர்ச்சி ஏற்படும் என்றும் அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்தனர். அத்துடன், தன்னார்வ நடுவுநிலை மூலம் சட்டக் கட்டமைப்புக்கு ஒரு மதிப்புமிக்க சேவை வழங்கப்படுவதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

# ரணிலுக்கு வந்த சிக்கல்நிலை அநுரவுக்கு ஒருபோதும் வராது

## ஐ.தே.க. தவிசாளர் விஜிர சுட்டிக்காட்டு

முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்ரமசிங்கவுக்குதற்போதுஏற்பட்டுள்ளநிலைமை, அரசமைப்பின் பிரகாரம் அரசுத் தலைவர் அநுரகுமாரவுக்குபாதிப்பைஏற்படுத்தப்போவதில்லை என ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்ரமசிங்கவின் அலுவலகத்தல் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசுத் தலைவர் பதவி நிலை அதிகாரத்தினால் மேற்கொள்ளப்படும் விடயங்கள் அரசமைப்பின் 33ஆவது உறுப்புரையின் பிரகாரம் அவரால் மேற்கொள்ளப்படும் விடயங்களாகும்.

33ஆவதுஉறுப்புரைக்குஅமையஅரசமைப்பில் அல்லது வேறு எந்தவொரு எழுத்து மூலமான சட்டத்துக்கு அல்லது விதிமுறைகளுக்கு முரண்படாமலும் சர்வதேச சட்டம், வழக்கம், பாரம்பரியம் அல்லது பயன்பாட்டுக்கு அமைய மேற்கொள்வதற்கு அவருக்கு உரித்தான அல்லது அவரின் பதவி நிலைக்கு உட்பட்ட அனைத்து செயல்களையும் விடயங்களையும் செய்ய அரசுத் தலைவருக்கு அதிகாரம் உண்டு.

அப்படியென்றால், தற்போதைய அரசுத் தலைவர் அநுரகுமார அரசமைப்பில் குறித்த உறுப்புரையின் அதிகாரம் இருக்கிறது. அரசுத் தலைவர் அநுரகுமார டில்லிக்கு செல்கிறாரா, வொஷிங்டனுக்கு செல்கிறாரா அல்லது உலகில் வேறு எங்கு செல்வது என்பதைத் தீர்மானிப்பது, குறித்த நாடு அல்ல. அதனைத் தீர்மானிப்பது அரசுத்தலைவர் அநுரகுமாரவேயாவார். அதனால் ரணில் விக்ரமசிங்கவுக்கு ஏற்பட்டிருக்கும் நிலை ஒருபோது அரசுத் தலைவர் அநுரகுமார பாதிப்பை ஏற்படுத்தப்போவதில்லை.

தனது துணைவிக்கு பட்டமளிக்கும் நிகழ்வொன்றுக்கு வழக்கம், பாரம்பரியத்துக்கு அமைய கணவனுக்கு அந்த நிகழ்வில் கலந்துகொள்வதற்கு உரிமை இருக்கிறது. அது இலங் கையில் பல்கலைக்கழகத்திலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட பாரம்பரியமாகும். அதற்கமைவாக அரசுத் தலைவருக்கு தனது துணைவியாரின் பட்டமளிப்பு விழாவில் கலந்துகொள்ளவதற்கு பதவி அதிகாரத்தில் தீர்மானிப்பதற்கு அரசமைப்பின் 33 (ஊ) உறுப்புரைக்கமைய இடமளிக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த பல்கலைக்கழகத்தின் பீடாதிபதியுடன் உணவு விருந்துபசாரத்தில் கலந்துகொள்வதற்காகவும் அந்த பல்கலைக் கழகத்தினால் விசேட அழைப்பொன்றும் கிடைக்கப் பெற்றிந்தது, பட்டமளிப்புவழாவில் கலந்துகொண்ட பட்டதாரிகளின்வாழ்க்கைதுணைவர்கள்யாருக்கும் இந்த உணவு விருந்துபசாரத்தில் கலந்துகொள்ள அழைப்பு கிடைக்கவில்லை. அவ்வாறு என்றால், ரணில் விக்ரமசிங்கவுக்கு அந்த அழைப்பு கிடைத்திருப்பது, அவர் இலங்கையின் அரசுத் தலைவர் என்பதாலாகும் என்றார்.

காலைக்கதிர்
Kalaikkathir

### இனப்படுகொலைச் சான்றாக மேற்கிளம்பும்

# செம்மணி மனிதப் புதைகுழிகளை அநுரகுமார நேரில் பார்வையிடலாம்

தமிழ் இனப் படுகொலையின் சான்றாதாரமாகவும் அதனது உள்நோக்கத்தை நிரூபிக்குமிடமாகவும் மேற்கிளம்பிவரும் - செம்மணி மனிதப் புதைகுழியை அரசுத் தலைவர் அநுரகுமார நேரில் பார்வையிடலாம் என கடற்றொழில் மற்றும் நீரியல் வள அமைச்சர் சந்திரசேகரன் தெரிவித்தார்.

செப்டம்பர் மாதம் முதல் நாளன்று யாழப்பாணம் வரும் அரசுத் தலைவர், இங்கு அபிவிருத்தித் திட்டங்களைத் தொடக்கி வைக்கவுள்ளார். மண்டைதீவில் சர்வதேச கிரிக்கெட் மைதானம் ஒன்றை அமைப்பதற்கான அடிக்கல்லையும் அவர் நாட்டுவார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பயணத்தின்போது அவர் செம்மணி மனிதப் புதைக்குழியை பார்வையிட வாய்ப்புள்ளதாக அமைச்சர் சந்திரசேகரன் தெரிவித்தார்.

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் யாழ். சாலைக்கு இரு குளிரூட்டப்பட்ட பேருந்துகளை வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசும்போது இதனைத் தெரிவித்தார்.

அரியாலை, சிந்துப்பாத்தி இந்து மயானத்தில் கடந்த மூன்று மாதங்களாக மனிதப் புதைகுழி தோண்டப்பட்டு வருகின்றபோதும் ஆளும்தரப்பைச் சேர்ந்த அமைச்சர்களோ நாடாளுமன்ற உறுப்பினர்களோ அதனை நேரடியாகச் சென்று பார்வையிட்டதில்லை. அரசுத் தலைவர் அதனைப் பார்வையிட்டால்



ஆளும்தரப்பிலிருந்து புதைகுழியை முதலில் பார்வையிடுபவராக அவரே இருப்பார்.

## அமெரிக்க காங்கிரஸ் சபைக் குழு பிரதமர் ஹரினியை சந்தித்து பேச்சு

பிரதமர் கலாநிதி ஹரினிக்கும் அமெரிக்க காங்கிரஸ் சபையின் ஜனநாயக ஒத்துழைப்புக் குழுவின் பிரதிநிதிகளுக்கும் (HDP) இடையிலான சந்திப்பு நேற்று பிரதமர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது பிரதமர் இலங்கையில் பொறுப்புக்கூறல் வெளிப்படைத்தன்மை சட்டவாக்கத்தின் பலம் மற்றும் பொருளாதார வளர்ச்சியை வலுப்படுத்துதல் ஆகியவற்றுக்கு அமெரிக்க காங்கிரஸ் சபையின் ஜனநாயக ஒத்துழைப்புக் குழுத்திட்டத்தின் பங்காளித்துவத்தின் முக்கியத்துவம் வலியுறுத்தினார்.

இந்த சந்திப்பில் கலந்து கொண்ட ஜனநாயக ஒத்துழைப்புக் குழுவின் பிரதிநிதிகள் நாடாளுமன்றத்துடன் முன்னெடுக்கப்படும் கண்காணிப்புச் செயல்முறை குடிமக்களின் பங்களிப்பு மற்றும் டிஜிட்டல் மயமாக்கல் தொடர்பில் அவர்களது பங்களிப்பை பற்றிச் சுட்டிக்காட்டியதோடு,

இக்கலந்துரையாடலின் போது நாடாளுமன்றத்திலும் தேசிய தலைமைத்துவத்திலும் பெண்களின் பங்களிப்பு மற்றும் தொழிற்படையில் பெண்கள் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்தும் விசேட கவனம் செலுத்தப்பட்டது.

இச்சந்திப்பில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர், நாடாளுமன்ற ஜனநாயக ஒத்துழைப்பு குழுவின் நிறைவேற்றுப் பணிப்பாளர், பிரதமரின் செயலர் பிரதீப் சபுதந்திரி பிரதமர் அலுவலகத்தின் மேலதிக செயலர் சாகரிகா போகாவத்த ஆகியோர் உட்பட வெளிவிவகார வெளிநாட்டுவேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சுகளின் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

## மண்கும்பான் வயல்வெளிகளில் திடீரெனப் பரவிப் பாய்ந்த நெருப்பு



மண்கும்பான் பிள்ளையார் கோயில் சுற்றுப்புறத்தில் இருக்கும் வயல் காணிகளில் காணப்பட்ட புற்கள் நேற்றுத் திடீரென நெருப்புப் பிடித்து முளாசி எரிந்தன. விசமிகளே இவ்வாறு தீயைப் பற்றவைத்துள்ளார்கள் என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

இது தொடர்பாக பிரதேச சபை தவிசாளருக்கு அறியப்படுத்தியதை அடுத்து துரித நடவடிக்கை மேற்கொண்டதன் பிரகாரம் யாழ். மாநகர சபையின் தீயணைப்பி வாகனம் குதித்த பகுதிக்கு வரவழைக்கப்பட்டு தீயை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

பற்ற வைக்கப்பட்ட தீ கடும் காற்றுக் காரணமாக பெரும் சுடர்விடு எரியத் தொடங்கியதால் யாழ்ப்பாணம் - ஊர்காவற்றுறை வீதியூடாகப் பயணிப்பதும் பெரும் சிரமங்களுக்கு உள்ளானது. யாழ். மாநகர சபை தீயணைப்புப் படையினர் கடுமையாகப் போராடியே தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இதேநேரம் அல்லைப்பிட்டி அலுமினியம் தொழிற்சாலை பகுதியில் இருந்து அராலிச் சந்தி வரைதான பல கிலோமீற்றர் தூரத்தில் உள்ள வயல் வெளிகளில் உள்ள புற்களுக்கு வருடவருடம் தீ மூட்டப்பட்டு வருவதும் அதை அணைப்பதும் தொடர்கதையாகி இருக்கின்றது.




## திருத்தப்பட்டு சேவைக்கு திரும்பிய இரு குளிரூட்டப்பட்ட பேருந்துகள்



இலங்கை போக்குவரத்து சபையின் யாழ்ப்பாணம் சாலைக்குரிய இரண்டு குளிரூட்டப்பட்ட பேருந்துகள் திருத்தப்பட்டு நேற்று மீளக் கையளிக்கப்பட்டன. .

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் யாழ். சாலைக்கு இரு குளிரூட்டப்பட்ட பேருந்துகளை வழங்கப்பட்டிருந்தன. கொழும்பு - யாழ்ப்பாணம் இடையே பயணிக்கும் வகையில் இந்தப் பேருந்துகள் வழங்கப்பட்டிருந்தன. ஆனால் அவை பழுதடைந்ததை அடுத்து பயன்பாடில்லாமல் நிறுத்தப்பட்டிருந்தன.

இவ்வாறு பயன்பாடின்றி இருக்கும் பேருந்துகளைத் திருத்திப் பயன்படுத்தும் ஆளும்தரப்பின் திட்டத்தின் கீழ் திருத்தப்பட்ட இந்த இரு பேருந்துகளும் நேற்று யாழ். மையப் பேருந்து நிலையத்தில் மக்கள் பாவனைக்கு மீண்டும் அறிமுகப்படுத்தப்பட்டது.

நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான இளங்குமரன், சிறீபவானந்தராஜா, இலங்கை போக்குவரத்து சபை துறைசார் அதிகாரிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

காலைக்கதிர்
Kalaikkathir

## இலங்கையின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையர்களுக்கு அடையாள அட்டையை விநியோகிக்கும் திட்டத்தை இந்தியாவுக்கு வழங்குவதால் ஏற்படும் பாதிப்புக்களை ஆளும்தரப்பு ஆலோசிக்கவில்லையா?

முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை பாதுகாப்பதற்காக நாங்கள் ஒன்றிணையவில்லை. அவரது அரசியல் மற்றும் பொருளாதார கொள்கைக்கும், எமது அரசியல் கொள்கைக்கும் இடையில் பரஸ்பர வேறுபாடுகள் காணப்படுகின்றன. சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்று குறிப்பிட்டுக் கொண்டு அரசமைப்புடனான சர்வாதிகாரத்தைசெயற்படுத்தஆளும்தரப்புக்கு இடமளிக்க முடியாது என்ற காரணத்தால் நாங்கள் ஒன்றிணைந்தோம் என்றார்.

## ரணிலின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அங்கு கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரதி பணிப்பாளர் ருக்ஷான் பெல்லன தொடர்பில் அவரிடம் கேள்விகள்எழுப்பப்பட்டன. அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் உடல்நிலை தொடர்பில் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரதி பணிப்பாளர்தான் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்டிருந்தார்.

நோயாளிஒருவரின்உடல்நிலைதொடர்பில் ஊடகங்களுக்கு அறிக்கையிடுவதற்குப் பிரதி பணிப்பாளருக்கு எவ்வித அதிகாரமும் கிடையாது. முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இவரது பிரிவில் அனுமதிக்கப்பட்டிருக்கவுமில்லை.

வைத்தியசாலைகளுக்கு வரும் நோயாளிகளுக்கு சிறந்த சேவை வழங்கு வது சுகாதாரத்துறை அமைச்சின் பொறுப்பாகும்.இருப்பினும் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரதி பணிப்பாளர் அவரது விடயதானத்துக்கு அப்பாற்பட்டு செயற்பட்டுள்ளார்.ஆகவே அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நோயாளி ஒருவர் எவ்வாறான பதவி நிலைகளில் இருந்தாலும் அவரது உடல்நிலை தொடர்பான மருத்துவ அறிக்கையை ஊடகங்களுக்கு பகிரங்கப்படுத்த கூடாது. கொழும்பு தேசிய வைத்தியசாலையின் பிரதி பணிப்பாளருக்கு அவ்வாறான அதிகாரம் கிடையாது.

முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் உடல்நிலை தொடர்பில் தேசியவைத்தியசாலையின்பிரதிபணிப்பாளர் ஊடகங்களுக்கு குறிப்பிட்டவற்றில் பல குறிப்புக்கள் போலியானவை. இவரது நடத்தை மருத்துவ கோட்பாட்டுக்கும், நாட்டின் பொதுச்சட்டத்துக்கும் முரணானது.ஆகவே இவருக்கு எதிராக நிச்சயம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

## ரணில் கைது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர்கள் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

அரசுத் தலைவர் ஒருவர் உள்நாட்டுக்குள் செத்தவீடொன்றுக்கு செல்வதற்கும் வேறு இடங்களுக்குச் செல்வதற்கும், வெளிநா டொன்றுக்கு பிரத்தியேக விமானத்தில் செல்வதற்கும் வேறுபாடு உண்டு. எனவே இவை இரண்டையும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்த முடியாது. அரச உத்தியோ கத்தர்களுக்குகூட அரச வாகனங்களைப் பயன்படுத்துவதற்கு சில வரைமுறைகள் காணப்படுகின்றன. சுற்றறிக்கை ஊடாகவும் அது தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்மை பொது சொத்துக்களை முறைகேடாகப் பயன்படுத்தினார் என்று முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டின் அடிப்படையிலாகும். குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் இது தொடர்பில்அளிக்கப்பட்ட முறைப்பாட்டுக்கமைய முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையிலேயேஅவர்கைதுசெய்யப்பட்டார். பின்னர் வழக்கு விசாரணைகளின்போது மருத்துவக் காரணங்கள் உள்ளிட்டவற்றை அடிப்படையாகக் கொண்டு பிணை வழங்குவதற்கும், சட்ட நடவடிக்கைகளை தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்வதற்கும் நீதிமன்றம் நடவடிக்கை எடுத்துள்ளது.

சட்ட நடவடிக்கைகள் நீதிமன்றத்தின் ஊடாகவேதீர்மானிக்கப்படும். இதுதொடர்பில் சிக்கல்கள் காணப்படுவதாக எண்ணுபவர்கள் மேன்முறையீடுகளின் ஊடாகவும் தமக்கான தீர்வினைப்பெற்றுக்கொள்ளமுடியும். இலங்கை வரலாற்றில் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சட்டம் அனைவருக்கும் சமமாகப் பயன்படுத்தப்படவில்லை. அதிகாரத்தின் அடிப்படையில் சட்டம் வேறுபாட்டுடனேயே நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆனால்தற்போது அவ்வாறான நிலைமை இல்லை என்பது இந்த வழக்கின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதனால்மக்கள்மகிழ்ச்சியடைந்துள்ளனர். எனவே இது அரசியல் பழிவாங்கலோ, தனிப்பட்ட பழவாங்கலோ அல்லது ஏகாதிபத்திய அரசமைப்பு நடைமுறையோ அல்ல. அரசமைப்பு ரீதியிலான ஏகாதிபத்தியத்துக்குச் செல்வதெனில் முதலில் அரசமைப்பில் அதற்கமைய திருத்தங்கள் மேற்கொள்ளப்படவேண்டும். 2020இல் அவ்வாறான நிலைமைகள் காணப்பட்டன.

இப்போது எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந் துள்ளமை ஆளும்தரப்புக்கு எந்த வகையி லும் சவால் அல்ல. இவர்கள் அனைவரும் யார் என்பதை மக்கள் தற்போது புரிந்து கொண்டிருப்பர். எனவே எமக்கு மகிழ்ச்சியான விடயமே.

விசாரணைகளுக்கமையவே சட்ட மா அதிபரின் ஆலோசனையைப் பெறுவதா இல்லையா என்பது தீர்மானிக்கப்படும். இந்த வழக்கில் சட்ட மா அதிபரின் ஆலோசனை குறித்த விவகாரம் தொடர்பில் நீதிமன்றமே தீர்மானிக்கும். பொது சொத்துக்களை முறைகேடாகப் பயன்படுத்துகின்றமை சட்டத்தை மீறும் செயலாகும். அதற்கெதிரான வழக்கு எவ்வாறு அரசியல் பழிவாங்கலாகும்? பொது சொத்துக்கள் முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டால் அவர்களுக்கு எதிராக தகுதி தராதரம் பாராமல் சட்டம் நடைமுறைப் படுத்தப்படும். இந்த விவகாரத்தில் எந்தவொரு இராஜதந்திரியோ அல்லது இராஜதந்திரதரப்போ எவ்விதகருத்துக்களையும்தெரிவிக்கவில்லை. ஒரு சில நபர்களே அவ்வாறு தெரிவித்துக் கொண்டிருக்கின்றனர் என்றார்.

## அமைச்சர்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கட்சிகள் ஒன்றிணைவதற்குச்சிறந்த சந்தர்ப்பம் ஏற்படுத்திக் கொடு;க்கப்பட்டுள்ளது. இனிவரும் காலங்களில் எடுக்கவேண்டிய அரசியல் தீர்மானங்கள் தொடர்பில் கலந்துரையாடல்கள் இடம்பெறுகின்றன. ஆளும்தரப்பால் முன்னெடுக்கப்படும் ஒடுக்குமுறைகளுக்கு எதிராக நாம் செயற்படுவோம்.

நீதிமன்ற வளாகத்தில் ஒன்றுகூடிய ஆதரவாளர்கள் எவரும் நீதிமன்ற தீர்ப்புக்கு எதிராகப் பேசவில்லை. நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு இடையூறு விளைவிக்கவுமில்லை. அவ்வாறிருக்கையில் அவர்களுக்கெதிராக எவ்வாறு சட்ட நடவடிக்கை எடுக்க முடியும்? எதிர்க்கட்சிகள் மீதுள்ள அச்சத்தினாலேயே அனைவரையும் முடக்குவதற்கான முயற்சிகளி;ல் ஆளும்தரப்பு ஈடுபட்டுள்ளது.

முடிந்தால் மக்களை ஒன்று திரட்டுமாறு சவால் விடுத்தனர். அதனை செய்த பின்னர் தற்போது ஒன்று கூடியவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க முயற்சிக்கின்றனர். மக்கள் தாமாகவே நீதிமன்ற வளாகத்தில் ஒன்று கூடினர். மாறாக யாரும் அவர்களை திட்டமிட்டு அழைக்கவில்லை. அதனாலேயே ஆளும்தரப்பு அச்சமடைந்துள்ளது. யார் எதைக் கூறினாலும் நீதிமன்றம் வழங்கும் தீர்ப்பிற்கு அனைவரும் மதிப்பளிக்க வேண்டும்.

எதிர்க்கட்சிகளுக்கு மாத்திரமின்றி ஆளுந் தரப்பில் குற்றமிழைப்பவர்களுக்கு எதிராகவும் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். அமைச்சர்களான குமார ஜயக்கொடி, வசந்த சமரசிங்க, பிமல் ரத்நாயக்க உள்ளிட்டோருக்கு எதிராக முறைப்பாடளிக்கப்பட்டுள்ள போதிலும் சட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை. அதற்காக நாமும் காத்திருக்கின்றோம் என்றார்.

## நேற்றும் 5....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எலும்புக்கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன

அதேவேளை, செவ்வாய்க்கிழமை அடையாளம் காணப்பட்ட எலும்புக்கூட்டு தொகுதிகளில் 08 எலும்புக்கூடுகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன

செம்மணிமனிதபுதைகுழியின்இரண்டாம் கட்ட அகழ்வு பணிகளுக்காக நீதிமன்றம் 45 நாட்கள் அனுமதி வழங்கியுள்ள நிலையில், இன்றைய தினம் புதன்கிழமை 35 ஆவது நாளாக மேற்கொள்ளப்பட்ட அகழ்வு பணி முன்னெடுக்கப்பட்டது.

அதேவேளைகட்டம்கட்டமாகஇதுவரையில் 43 நாட்கள் முன்னெடுக்கப்பட்ட அகழ்வு பணிகளின்போது, இன்றையதினம் அகழ்ந்து எடுக்கப்பட்ட எலும்புக்கூட்டு தொகுதியுடன் 158 எலும்பு கூட்டு தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

அதேவேளை இதுவரையில் 169 எலும்புக்கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

# மக்களின் பிரச்சினைகளை தீர்க்கவே எதிர்க் கட்சிகள் கூட்டணி அமைப்பு

## இப்படிப் புது விளக்கம் கொடுக்கிறார் சஜித்

நாட்டில் மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளுக்குதீர்வுவழங்குவதற்காகவே எதிர்க்கட்சிகளால் பரந்துபட்ட கூட்டணி அமைக்கப்படுகிறது. அதனை விடுத்து எந்தவொரு அரசியல் நோக்கமும் அதில் இல்லை என எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை நேற்றுப் பார்வையிட்ட பின்னர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசியல் நோக்கங்களுக்காக எதிர்க்கட் சிகளால் பரந்துபட்ட கூட்டணி அமைக்கப் படவில்லை. நாட்டின் பிரச்சினைகளுக்கு தீர்வினை வழங்குவதற்காகவே நாம் ஒன்றிணைந்துள்ளோம். தற்போதைய ஆளும்தரப்புக்கு பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்குவதற்கான இயலுமை இல்லை. 40 000 பட்டதாரிகள் வீதியிலிருக்கின்றனர். வழங்கப்பட்டவாக்குறுதிக்கமையஅவர்களுக்கு தொழில் வழங்கப்படவில்லை.

விவசாயிகள் உரமானியம் இன்றி நெருக்கடிகளை எதிர்கொண்டுள்ளனர். நெல் விவசாயிகளுக்கு தம்மால் அருவடை செய்யப்படும்நெல்லைஸ்திரவிலைக்குவழங்க முடியாத நிலைமை காணப்படுகிறது. நாட்டில் 50 சதவீதமானோர் வருமையிலிருப்பதாக தரவுகள் கூறுகின்றன. 71 சதவீதமானோர் அஸ்வெசும நலன்புரி கொடுப்பனவைக் கோருகின்றனர்.

மொரட்டுவ வைத்தியசாலையில் மருத்துவ பீடத்தில் கற்பிப்பதற்கான வசதிகள் குறைவாகவே உள்ளன. இவ்வாறு பல்வேறு துறைகளிலும் பெருமளவான பிரச்சினைகள் உள்ளன. இவற்றில் ஒரு பிரச்சினைக்கு கூட ஆளும்தரப்பால்தீர்வு வழங்க முடியவில்லை. பொருட்களின்விலைகள்சடுதியாகஅதிகரித்துச் செல்கின்றன. இவ்வாறானபிரச்சினைகளுக்கு தீர்வினைக் காண்பதற்காகவே நாம் ஒற்றுமையை ஏற்படுத்துகின்றோம் என்றார்.

# கைது செய்யப்பட்ட காரணத்தாலேயே ரணில் உடல்நிலை பாதிக்கப்பட்டதாம்

ரணில் விக்கிரமசிங்க தனது உடல் ஆரோக்கியத்தை நாளாந்தம் முறையாக முகாமைத்துவம் செய்துவரக்கூடியவராக இருந்துள்ளார் என்றாலும் அவர் கைது செய்யப்பட்ட தினம், அவரது நாளாந்த செயற்பாடுகள் பாதிக்கப்பட்டதாலேயே அவர் நோய்க்குள்ளானாரென ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

கொழும்பில் அமைந்துள்ள முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் அலுவலகத்தல் நேற்று இடம்பெற்ற செய்தியாளர்சந்திப்பில்இதனைத்தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த வாரத்தை இலங்கை வரலாற்றில் இருண்ட காலமாக நாங்கள் அடையாளம் கண்டுள்ளோம். குறிப்பாக, சர்வதேச ஜனநாயகக் கூட்டணி தனது எக்ஸ் தளத்தில், ஒரு காலத்தில் தமது கூட்டணியின் துணைத் தலைவராக பணியாற்றிய முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டதற்கு தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்திருந்தது.

கைது செய்யப்பட்டதிலிருந்து முன்னாள் அரசுத் தலைவரின் உடல்நிலை வேகமாக மோசமடைந்தது. எனவே, அவர் முறையான மேற்பார்வையின் கீழ் சிகிச்சை பெறும் வகையில், அவரைத்தடுப்புக்காவலில்இருந்து விடுவிக்குமாறு இலங்கை ஆளும்தரப்பை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம் என தெரிவித்திருந்தது.

அதேநேரம் ரணில் விக்கிரமசிங்கவின் உடல் நிலைமை குறித்து சமூக ஊடகங்களில் பலர் பல்வேறு கருத்துக்களை வெளிப்படுத்துவதையும்நான்கண்டேன். அவர் தனது வாழ்க்கையை ஒரு குறிப்பிட்ட போக்கில் முகாமைத்துவம் செய்துவந்தார் என்றே நினைக்கிறேன். அது சில உடற்பயிற்சிகள் மூலம், சரியான நேரத்தில் சாப்பிடுவதன் மூலம் என்று இருந்திருக்கலாம்.

இந்நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை குற்றப்புலனாய்வு பிரிவு, நீதிமன்றம் என சுமார் 12 மணி நேரம் அவருக்கு பெரியளவில் அழுத்தம் கொடுத்து அவரின் உடல்நிலையை பாதிக்கச்செய்திருக்கிறது.

அத்துடன் ரணில் விக்கிரமசிங்க கைதுசெய்யப்பட்டு சிறைப்படுத்துவதற்கு அழைத்துச்செல்லப்பட்டிருப்பதும் அவரது பரம்பரைக்கு உரித்தான அல்லது அவரது பாட்டிக்கு உரித்தாகி இருந்த 43 ஏக்கர் கொண்ட வெலிக்கடை சிறைச்சாலைவளாகத்துக்காகும். அதனால் இந்தச் சம்பவத்தை அத்தகைய தலைமுறையைச் சேர்ந்த ஒருவருக்கு நடந்த மிகவும் துயரமான நடத்தையாகவே நான் பார்க்கிறேன்.

உண்மையில், இலங்கையில் உள்ள அனைத்து அரசியல் கட்சிகளும், அனைத்துச் சக்திகளும், முழு சட்ட சமூகமும், அனைத்து மருத்துவக் குழுக்களும் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவாக நின்றன. அத்துடன் வைத்தியர்கள் பலர் விடுமுறை பெற்றுக்கொண்டு, ரணில் விக்கிரமசிங்கவுக்கவின் பிணை மனுவில் கைச்சாத்திடக் காத்திருந்தனர். எனவே ரணில் விக்கிரமசிங்கவுக்கு நீதி கிடைப்பதற்கு அர்ப்பணித்த முழு இலங்கை மக்களுக்கும் எமது கட்சி சார்பில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

## ஊழல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் சம்பவத்துக்கு அவர் பொறுப்புக்கூற வேண்டும் என்று கடந்த காலங்களில் அவர் மீது குற்றச்சாட்டுக்களை முன்வைத்தஅணியினர்தான்ஜனநாயகத்தை பாதுகாப்பதற்காகபோரட்டத்தில்ஈடுபடுகின்றனர் என்று குறிப்பிடுகிறார்கள்.

166 இலட்சம் ரூபாய் அரச நிதியை முறைகேடாக பயன்படுத்திய குற்றச்சாட்டுக்காகவே முன்னாள் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கைது செய்யப்பட்டார். இதனை எவ்வாறு ஜனநாயக விரோத செயல் என்று குறிப்பிட முடியும். அவ்வாறாயின் முன்னாள் அமைச்சர்கள் பலர் அரச நிதி மோசடிக்காக இன்றும் சிறையில் உள்ளார்கள் அதுவும் ஜனநாயக விரோத செயலா? அவர்களுக்கு ஆதரவாகவும் எதிர்தரப்பினர் போராட்டத்தில் ஈடுபட வேண்டியதுதானே,

தேர்தல் ஒன்றுக்கு அறிவிப்பு விடுத்தால் எதிர்க்கட்சிகளின் ஒன்றிணைவின் உறுதிப்பாட்டை விளங்கிக் கொள்ளலாம். ஊழல்வாதிகளுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதால் ஊழல்வாதிகள் முன்னெச்சரிக்கையாக ஒன்றிணைந்துள்ளார்கள்.எதிர்க்கட்சிகளின் ஒன்றிணைவு ஆளும்தரப்புக்கு சவாலல்ல.

சட்டத்தின் முன் அனைவரும் சமமாக மதிக்கப்பட வேண்டும். எவருக்கும் சிறப்பு சலுகை வழங்க கூடாது. சுயாதீன விசாரணைகளுக்கமையவேநீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்படுகிறது. நீதிமன்றம் சுயாதீனமாகச்செயற்படுகிறது. நீதிமன்றத்தின் உத்தரவை குறுகிய அரசியல் நோக்கத்துக்காக விமர்சிப்பது முறையற்றது என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir









இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.08.2025இல் வெளியிடப்பெற்றது